*War-torn Region on Edge with Peace Process Uncertain*
*Rahul Bedi*

## இலங்கை

# சமாதான முயற்சிகளின் ஐயப்பாட்டுக்கு மத்தியில் போரினால் சிதைந்த பிரதேசத்தில் அச்ச உணர்வு

**- ராஹூல் பெதி -**

யாழ்ப்பாணம் (ஐ.பி.எஸ்.): கொடிய யுத்தம் ஏற்படுத்திய அழிவுகளிலிருந்து இலங்கையின் வட பிரசேமான யாழ்ப்பாணக் குடாநாடு இன்னமும் மீளாத நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையே 21 மாதங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த யுத்தநிறுத்தம் தற்போதைய அரசியல் நெருக்கடி காரணமாக ஆபத்துக்குள்ளாகி இருக்கிறது.

ஆனால், தலைநகரில் ஏற்பட்டுள்ள அரசியல் இழுபறி ஒருபுறமிருக்க சுமார் 40,000 இராணுவத் தினரால் முற்றுகையிடப்பட்ட பயப் பிராந்தியுடன் கூடிய மக்களையும் ஷெல் ஏவுகணைகளினால் சேதமடைந்த - கைவிடப்பட்ட நிலையிலுள்ள ஆயிரக்கணக்கான வீடுகளையும், தறித்து வீழ்த்தப்பட்ட பனை மரங்களையுமே காணக்கூடியதாக இருக்கிறது.

சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கையில் சிறுபான்மைத் தமிழர்களுக்கென தாயகம் கோரிப் போராடிவரும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை - இந்திய இராணுவத்துக்கும் இடையே இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக வடபகுதியின் அடர்ந்த தென்னை மரச் சோலைகளிலும் பசுமையான பிரதேசங்களிலும் இடம்பெற்ற கொடிய யுத்தத்தின் விளைவுகளே இக்காட்சிகளாகும்.

இன்று, யுத்தத்தின் கொடூரம் தணிய ஆரம்பித்துள்ள போதிலும் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவுக்கும், பிரமத மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே கட்சிச் சண்டை காரணமாக சமாதான முயற்சிகளுக்க என்ன ஆகுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

நவம்பர் மாதம் 4ம் திகதி விக்கிரமசிங்க அமெரிக்கா சென்றிருந்த போது ஜனாதிபதி சந்திரிகா மூன்று அமைச்சர்களைப் பதவி விலக்கியதோடு பாராளுமன்றக்கூட்டத் தொடரையும் ஒத்திவைத்தார். 2002ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானதிலிருந்து பிரதம மந்திரி விடுதலைப்புலிகளுக்கு அதிக சலுகைகளை வழங்கி வருகிறார் என்று ஜனாதிபதி தமது நடவடிக்கைக்கு காரணம் காண்பித்தார்.

விடுதலைப்புலிகள் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தி இருந்த போதிலும் நோர்வே மத்தியஸ்தர்களின் முயற்சியால் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இருந்த வேளையில் இந்த அரசியல் பலப்பரீட்சை ஏற்பட்டுள்ளது.

விக்கிரமசிங்கவுக்கும், குமாரதுங்கவுக்கும் ஏற்பட்ட பலப்பரீட்சைக்கு மத்தியில் நோர்வே அதன் மத்தியஸ்தப் பணியிலிருந்து விலகிக் கொள்கிறது என்று அந்த நாட்டின் பிரதிவெளிநாட்டமைச்சர் விதார் ஹெல்கெசன் அறிவித்தார். இலங்கையின் தலைமைத்துவத்தில் தெளிவு ஏற்படுத்தப்படும் வரை மத்தியஸ்தப் பணிகளை மேற்கொள்ள முடியாதென அவர் தெரிவித்தார்.

ஒரு தமிழரான பேராயர் தோமஸ் சௌந்தரநாயகம் அளித்த பேட்டி ஒன்றில் யுத்தநிறுத்தம் பலவீனமடைந்துள்ளது என்று கூறினார். நாட்டின் உயர் தலைவர்கள் இருவருக்குமிடையே தோன்றியுள்ள இம்மோதலால் இனப்பிரச்சினை காரணமாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பிரதேசத்தில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று அச்சம் தோன்றியுள்ளது. 1983ல் போர் ஆரம்பமானதி லிருந்து இதுவரை 60,000 பேர் உயிரிழந்தார்கள்.

அமைதியை விரும்பும் ஏனைய மக்களும் பேராயரின் எச்சரிக்கையையே பிரதிபலிக்கிறார்கள். அரசாங்க சார்பற்ற அமைப்புக்கள் சபையைச் சேர்ந்த பொன்மலர் இராஜேஸ்வரன் கருத்துத் தெரிவிக் கையில் விடுதலைப்புலிகள் பொறுமையாக இருந்து சமாதானத்தை ஏற்படுத்தவே விரும்புகிறார்கள் என்றும் இறுதியில் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்றும் கூறினார். எவருமே யுத்தத்தை விரும்பவில்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, தெற்காசிய நாடான இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்க்கையை சுமுக நிலைக்கு கொண்டு வருவதற்கான பணிகள் மெதுமெதுவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தலைநகரான கொழும்பிலிருந்து சுமார் 560 கிலோமீற்றர் தூரத்தில் விடுதலைப்புலிகளின் கலாசார, அரசியல் தலைநகரான யாழ்ப்பாணத்தில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் சமூக மனநோய் சுகாதாரத்திட்டம் ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெண்கள், சிறுவர்கள் உட்பட யுத்தத்தினால் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இலங்கை இராணுவம் 1995ல் பல வாரங்களாக விடுதலைப்புலிகளுடன் நடத்திய சண்டையை அடுத்து யாழ்ப்பாணத்தை அதன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. இச்சண்டையில் நூற்றுக்கணக்கா னோர் உயிரிழந்தனர்.

5 வருடங்களின் பின்னர் 6 இராணுவத்துக்கு ஒரு புலி என்ற அடிப்படையில் போராடிய விடுதலைப்புலிகள் 10,000 அரசாங்கப் படையினரை அங்கிருந்து பின்வாங்கச் செய்து யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றும் நிலைக்கு வந்தபோதிலும் போரினால் மேலும் அழிவுக்குள்ளான அந்தப் பிரதேசத்தைப் புலிகள் மீட்காமல் விட்டுவிட்டார்கள்.

ஷெல் ஏவுகணைகளும், மோட்டார் குண்டுகளும் யாழ்ப்பாண நகர் மீது பல நாட்களாகப் பொழியப்பட்டன. யாழ்ப்பாணப் பேராயர் தோமஸ் சௌந்தரநாயகத்தின் படுக்கை அறைக்குள் ஷெல் ஏவுகணை ஒன்று வீழந்து வெடித்த போது அருகிலிருந்து தேவாலய வளவினுள் பலர் தஞ்சம் புகுந்திருந்தனர். பேராயர் அவ்வேளையில் அங்கிருக்கவில்லை.

கடற்கரை அருகில் அமைந்துள்ள பலாலி இராணுவ, விமான நிலைய வளவிலிருந்து யாழ். நகர் வரையிலான 9.6 கி.மீ. நீளமான பழுதடைந்த வீதியின் இரு மருங்கிலும் முறிந்த பனை மரங் களையும், சேதமடைந்த வீடுகளையுமே காண முடிந்தது. இன்னமும் ரைபிள்களைத் தாங்கிய இராணுவ வீரர்கள் அவ்வீதியில் ரோந்து செல்வதைக் காணலாம்.

யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கு நோக்கி 64 கி.மீ. தூரத்தில் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைமைக் காரியாலயத்துக்கு செல்லும் ஏ-9 வீதி யுத்தத்தினால் சேதமடைந்து காணப்பட்டது. வீதியின் இரு பக்கங்களிலும் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. வீடுகள், களஞ்சிய சாலைகள்,

கட்டிடங்கள் யாவும் விமானக்குண்டு வீச்சினாலும், பீரங்கித் தாக்குதல்களினாலும் தரைமட்டமாகக் காணப்பட்டன.

1987ம் ஆண்டிலிருந்து இரண்டு வருடங்களாக விடுதலைப்புலிகள் அவர்களிடமிருந்து ஆயுதங் களைக் களைவதற்காக அனுப்பப்பட்ட இந்தியப் படைகளுடன் போராடினர். 1,340க்கும் அதிகமான இந்திய வீரர்களை இழந்த பின்னர் இந்தியப்படை அவமானத்துடன் பின்வாங்கியது.

செழிப்பானதும், நெல்லும் தென்னையும் அதிகமாக வளரும் பிரதேசங்கள் அடங்கிய குடா நாட்டின் மூன்றி ஒரு பகுதியில் கட்டிட சிதைவுகளுக்கு மத்தியில் தாங்கள் வாழ்ந்து வருவதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் சபையைச் சேர்ந்த சோதிநாதன் என்பவர் தெரிவித்தார்.

யுத்தத்தில் அழிந்து போன 120,000 க்கும் அதிகமான வீடுகளையும் ஏனைய கட்டிடங்களையும் மீளக் கட்டித் தருவதாக அரசாங்கம் உறுதியளித்த போதிலும் எதையும் நிறைவேற்றவில்லை என்றும் கோரி நாதன் கூறினார்.

ஆறு சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற நிலையில் பேச்சுக்களை இடைநிறுத்திக் கொண்ட விடுதலைப்புலிகள் அகதிகளை மீளக்குடி அமர்த்தவோ, போரினால் அழிந்த பகுதிகளை புனர்நிர்மாணம் செய்யவோ அரசு எதையும் செய்யவில்லை என்று குற்றம் சாட்டினார்கள்.

கரையோரக் கிராமமான சாவக்காட்டில் இராணுவத்தினால் கொல்லப்பட்ட மீனவர்களின் மனைவியரான சுமார் 100 விதவைப் பெண்கள் இராணுவத்தைப் பழிவாங்குவதற்காக விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்து போராடப் போவதாகத் தெரிவித்தார்கள்.

யுத்தநிறுத்தம் அமுலில் இல்லாவிட்டால் நாங்கள் விடுதலைப்புலிகளுடன் இணைந்து போராடு வோம் என்று கிராமிய விதவையர் சங்கத்தின் தலைவியான சகிலா (28 வயது) கூறினார். சகிலாவின் கணவன் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பாரம்பரிய இந்துக் குடும்பங்களில் கணவரை இழந்த விதவையர் வைபவங்களில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்படுவதுடன் அபசகுனமாகவும் கருதப்படுவதால் புலி களுடன் இணைந்து போராட்டத்திலாயினும் ஈடுபட அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளார்கள்.

விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் போராட்டத்தில் வல்லவர்களாகப் பெயர் பெற்றுள் ளார்கள். விசேடமாகத் தற்கொலைத் தாக்குதல்களில் இவர்கள் துணிச்சலுடன் ஈடுபடுகிறார்கள்.

தற்போது, பல மாதங்கள்அமைதி நிலவியதால் யாழ்ப்பாணத்தில் பல அபிவிருத்திகள் இடம் பெற்றுள்ளன. புதிய ஹொட்டேல்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள், கணனிகள், குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள் போன்ற பல்வேறு பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் அங்கு தோன்றியுள்ளன.

யுத்த காலத்தில் இல்லாதிருந்த மின் பிறப்பாக்கிகள் தற்போது பெருமளவில் கிடைக்கின்றன. கையடக்கத் தொலைபேசி வலையமைப்பும் திறம்பட செயல்பட்டு வருகிறது.

யுத்தம் நடைபெற்ற போது எரிபொருள் கிடைக்காததால் மண்ணெயில் இயங்கிய பழைய கால வாகனங்களான மொறிஸ் ஒக்ஸ்போட், மொறிஸ் மைனர், மினி மைனர், ஹில்மன் கார்களுக்குப் பதிலாக தற்போது ஜப்பானின் நவீன கார்கள் வீதிகளில் பவனி வரத் தொடங்கி உள்ளன.

ஆனால், தற்போது அவநம்பிக்கை உணர்வு ஒன்று யாழ்ப்பாண மக்கள் மத்தியில் தலைதூக்கி யுள்ளது. கொழும்பில் தோன்றியுள்ள பலப்பரீட்சையும், அரசியல் நெருக்கடியும் சமாதான முயற்சிகளை ஸ்தம்பிக்கச் செய்து விடுமோ என்று மக்கள் அஞ்சுகிறார்கள். இதனால், விடுதலைப்புலிகளுடன் முரண்பாடு ஏற்பட்டு மீண்டும் போர் வெடிக்குமோ என்ற பீதி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வாரம், அரசாங்கமும் யுத்தநிறுத்தத்தை மீறுவதில்லை என்ற உத்தரவாதத்தை அதனிட மிருந்து விடுதலைப்புலிகள் பெற்றுள்ளார்கள். விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுத்தலைவர் எஸ்.பி. தமிழ்ச்செல்வன் புலிகள் யுத்திதிற்கு திரும்பமாட்டார்கள் என்று உறுதி கூறியுள்ளார்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளுக்கு நெருங்கிய வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கை யில், புலிகள் அவர்களது உறுப்பினர்களை விழிப்புடன் இருக்குமாறு தெரிவித்துள்ளார்கள் என்றும் 2002ம் ஆண்டு யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்தபோது இருந்ததிலும் பார்க்கப் புலி உறுப்பினர்களின் தொகை தற்போது இரண்டு மடங்காகி சுமார் 20,000 பேராக அதிகரித்துள்ளது என்று கூறுகிறார்கள்.

தங்கள் அரசியல் தேவைகளை நிறைவேற்ற யுத்தம் தான் அவசியம் என்று உணரப்பட்டால் தீவிர யுத்தம் ஒன்றில் இறங்குவதற்கும் அவர்கள் தயாராக இருப்பதாகப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் தெரிவித்தார்.